

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## சிறிதாயினும், அது உம் கரத்திலிருந்தே வர வேண்டும்!

நமக்கு 'இன்னது தேவை' என அவர் எதை தெரிந்து கொண்டாரோ, அதையே எனக்குத் தரும்படி ஜெபிக்க கற்றுக் கொண்டால், நம் ஜெபவாழ்க்கையில் ஒருபோதும் சோர்வு ஏற்படாதே!

இயேசுகிறிஸ்துவிடம் வந்த கிரேக்க ஸ்திரீயின் விசுவாசம் என்ன தெரியுமா? ''ஆண்டவரே உம் மேஜையிலிருந்து முழு அப்பம் தருவதாய் இருந்தால் தாரும்.... இல்லாவிட்டாலும் பரவாயில்லை..... ஆனால், சிறு துணிக்கையாயிருந்தாலும் அது உம் மேஜையிலிருந்து சிந்துவதாய் இருக்க வேண்டும்'' என்பதே அவளுடைய விசுவாசம்! (மாற்கு.7:28,29). ஆண்டவரே, இப்பூமிக்குரிய தேவை எதுவாயிருந்தாலும்.... ஏன், ஊழியமே ஆனாலும் ''நீர் உம்முடைய கரத்திலிருந்து தரவேண்டும்!'' அது, ''சிறிய துணிக்கையாய்'' இருந்தாலும் ஒருபொருட்டல்ல! ஆ.... இப்படி நாம் வாழ்ந்துவிட்டால், பிறர் வைத்திருக்கும் ''முழு அப்பத்தைக்'' கண்டு நாம் எப்படி பொறாமை கொள்ள முடியும்? இரகசியம் என்னவென்றால், அவள் பெற்ற 'துணிக்கை' அவளின் முழுதேவையையும் பூர்த்தி செய்துவிட்டது! (மாற்கு 7:30).

*-tr*

பெட்டகம் 20 | பிப்ரவரி 2018 | பரல்கள் 2



## நமது முகமும், இயேசுவின் முக ரூபமாய் மறுரூபமாவதாக!

"இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளி" என 2கொரிந்தியர் 4:8-ல் வாசிக்கிறோம். அதேபோல், ஸ்தேவானை ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக நிறுத்தி, அவன்மீது பொய்குற்றங்களை சுமத்தியபோது "அவன் முகம் தேவதூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள்" எனவும் அப்போஸ்தலர் 6:15-ல் வாசிக்கிறோம். ஆகவே நம் "முகபாவத்தில் திவ்விய சுபாவம்" அடைந்திட நாடுவதும் "பூரணத்தை நோக்கி" கடந்து செல்லும் வாழ்க்கையில் மிகவும் முக்கியமாகும்!!

**உங்கள் "கடுஞ்சொல்லைவிட" உங்கள் "முகச்சுளிப்பு" அல்லது உங்கள் "நெற்றியை சுருக்குதல்" அதிகக் கொடியதென்றே கூறலாம்.**

ஒவ்வொரு நாளும் தங்களை நியாயம்தீர்த்து வாழ்கின்ற ஒரு தாயும், தந்தையும்.... தங்கள் பிள்ளைகள் பிரதிபலித்த முகச்சுளிப்பு தங்களிடமிருந்தே அதை கற்றுக் கொண்டார்கள் என்பதைத் துரிதமாய் கண்டுகொள்வார்கள்! இவ்வாறு 'கண்ணாடிபோல்' தங்கள் பிள்ளைகளின் பிரதிபலிப்பில் தங்களைக் காணும் எந்த உத்தம கணவனும், மனைவியும்.... துரிதமாய் மனந்திரும்பி, திவ்விய சுபாவத்தில் வளருவார்கள்!

இயேசு கிறிஸ்து கைகளிலும் கால்களிலும் ஆணியடிக்கப்பட்டது போலவே, நம் "நெற்றியைச் சுருக்கும்" பாவங்களுக்காய் நெற்றியில் இரத்தம் வடிய முள்முடி சூட்டப்பட்டார்! உண்மைதான், நாம் இன்றிலிருந்தாவது இக்கொடூர முகபாவத்திலிருந்து விடுதலை பெற்று மறுரூபமடைய பரிசுத்தாவியின் உதவியை நாடுவோமாக!!

*-Ed*

### முக்கிய அறிவிப்பு

**2018 'பரலோக பொக்கிஷங்கள்'** வருட சந்தா ரூ.**140/-** M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் புதுப்பித்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி! புதுப்பிக்காதவர்கள் **15-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3** பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**800/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக்கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## இயேசுவைப் போலவே என்னையும் பாதுகாக்கும் தேவ அன்பு!

*முற்றிலும் அசைக்கப்படாத உறுதியான ஜீவியத்தை இயேசு கிறிஸ்து மாத்திரமே இந்த பூமியில் வாழ்ந்தார்! பிசாசானவன் இயேசுவைப் பார்த்து 'எனக்கு முன்பாக தலை வணங்கு' எனக் கூறிய போது, இயேசு மறுத்துவிட்டார். பிலாத்துவுக்கு முன்பாக இயேசு நின்ற போதும் "எனக்கு நீ தலை வணங்கினால், உன்னை விடுதலை செய்ய எனக்கு அதிகாரம் உண்டு!" எனக்கூறினார். அதற்கும் இயேசு சிறிதேனும் தலை வணங்க மறுத்துவிட்டார். பிலாத்துவைப் பார்த்து "உனக்கு என்மீது அதிகாரம் இல்லை. என் பிதா எனக்காக தீர்மானித்தால் ஒழிய, எனக்காக தீர்மானிக்க உம்மால் முடியாது!" என்றும் திடமாய் கூறினார். இயேசு பெற்றிருந்த அந்த ஆச்சரியமான தைரியத்தைப் பாருங்கள்!*

**அவர் யாதொன்றிற்கும் அஞ்சவில்லை. ஆம், தன்னைச் சுற்றி எது நடந்தாலும், இயேசு சிறிதுகூட பயப்படவில்லை!**

*உதாரணமாய், லூக்கா.4:16-18 வசனங்களில் இயேசு தன் சொந்த ஊராகிய நாசரேத்திற்கு வந்து, தம்முடைய வழக்கத்தின் படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து வேத வாக்கியத்தை வாசிக்க எழுந்து நின்றார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி புத்தகத்தை அவர் விரித்தப்போது: "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்! தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியும், இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், சிறைப்பட்டவர்களை விடுதலை செய்யவும், குருடர் பார்வை அடையவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்" என்று எழுதியிருக்கிறவைகளை வாசித்து, புஸ்தகத்தை சுருட்டி, அமர்ந்தார். இவ்வாறு இயேசு நலமான அநுக்கிரகங்களை பேசிய போது, ஜனங்கள் "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகள்" எனக் குறிப்பிட்டு ஆச்சரியப்பட்டார்கள்! (வச.22). ஆனால், இந்த அநுக்கிரகம் இஸ்ரவேலுக்கு மாத்திரம் அல்ல, சீதோன் நாட்டிற்கும், சீரியா தேசத்திற்கும்..... போன்ற* **புறஜாதிகளுக்கும் இந்த சுவிசேஷம் உண்டு** *என இயேசு கூறியதும் அவர் மீது ஜனங்கள் கோபமடைந்தார்கள்! (வச.26-28).*

கோபம் கொண்ட ஜனங்கள், இயேசுவின் பிரசங்கத்தை நிறுத்தி, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊரின் செங்குத்தான மலையின் சிகரத்தில் அவரை தலைகீழாய் தள்ளி விடும்படிக்கு கொண்டு சென்றார்கள் (வசனம்.29). அங்கிருந்து அவரை தலைகீழாய் தள்ளிவிட திட்டம் செய்தார்கள். இங்குதான் **இயேசுவின் அசைக்கப்படாத ஜீவியத்தைக்** காண்கிறோம். அந்த நிலையிலும் இயேசு சிறிதுகூட அஞ்சவில்லை.

சுமார் 300 பேர் நம்மை சூழ்ந்து நின்று ஒரு குன்றின் உச்சியிலிருந்து நம்மைத் தள்ள முயற்சித்தால் எவ்வளவு அச்சம் உண்டாகும் என்பதை எண்ணிப்பாருங்கள்! ஆனால் இயேசுவோ, மிகுந்த அமைதியுடன் காணப்பட்டார். அப்போது நடந்த அற்புதம் என்னவெனில், "அவரோ அவர்கள் நடுவிலிருந்து கடந்து போய் விட்டார்!" என்ற இனிய வாசகத்தை வாசிக்கிறோம் (வசனம்.30). "இது எப்படி நடந்திருக்க முடியும்?" என்பதை எண்ணிப்பாருங்கள். ஒரு சமயம், பிலிப்புவை ஒரு தூதன் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தூக்கிச் சென்ற செயலை அப்போஸ்தலர்.8-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

ஆனால் இங்கோ, இயேசுவுக்கு அதுபோன்ற செயல் நடைபெறவில்லை! இங்கு இயேசுவோ "வெகு சாதாரணமாய், அவர்கள் நடுவிலிருந்து கடந்துபோய் விட்டார்" என்ற ஆச்சரியமான வசனத்தை வாசிக்கிறோம். சுமார் 300 ஜனங்கள் கூடியிருக்கும் இடத்திலிருந்து, அவர் எப்படி சாதாரணமாய் கடந்து, நடந்து சென்றிருக்க முடியும்? என்றே நமக்கு ஆச்சரியமாய் உள்ளது! இயேசு ஜனங்களின் பிடியிலிருந்து தப்பிச் சென்ற விதம் இவ்விதமாய் இருந்திருக்கக்கூடும் என்றே நாம் யூகிக்க முடிகிறது:

> **அந்த 300 ஜனங்களும் "இயேசுவை இந்த குன்றிலிருந்து தள்ளினால் சாவாரா? அல்லது இயேசுவை அந்த குன்றிலிருந்து தள்ளிவிட்டால் சாவாரா?" எனத் தீவிரமாய் ஒருவருக்கொருவர் ஆலோசித்துக் கொண்டிருந்தபோது, இயேசு அவர்களிடமிருந்து அமைதியாய் நடந்து சென்று விட்டார்! (லூக்கா.4:30). இந்த நிகழ்ச்சி ஓர் அற்புத காட்சியாய் தோன்றாமலே, ஓர் மாபெரும் அற்புதமாய் இருக்கிறது!**

தம்முடைய தாசர்களைக் காப்பதற்கு, தேவன் என்னவெல்லாம் செய்கிறார் என்பதைப் பாருங்கள்! இங்கு, உங்களை அண்டிவரும் கேள்வி என்னவென்றால் "இந்த பாதுகாப்பை, தேவன் உங்களுக்கும் எனக்கும் செய்வாரா?" என்பதுதான். அநேகர் எண்ணும் விடையெல்லாம் "அப்படி இருக்க முடியாது" என்பதுதான். பிதா,

இயேசுவுக்கு வேண்டுமானால் அவ்வாறு செய்யக்கூடும்.... நமக்கு அவ்வாறு செய்யமாட்டார், என்றே எல்லோரும் எண்ணுகிறார்கள். ஆனால் இந்த செய்தியை வாசிக்கும் உங்களில் சிலர் "இயேசுவுக்கு என்ன பாதுகாப்பை பிதா அருளினாரோ, **அதே பாதுகாப்பை** எனக்கும் தருவார்!" என விசுவாசித்தால், உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்கும் ஆகும். இதை விசுவாசிக்காதவர்களுக்கு, அவர்களுடைய அவிசுவாசத்தின்படியே தேவனுடைய பாதுகாப்பை பெற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஆம், இயேசுவுக்கு நடந்ததைப்போல், உங்களுக்கு ஜனங்கள் தீமை செய்ய நினைத்தாலும், அவர்களால் தீங்கு செய்ய இயலாது! உங்களுக்கு தீங்கு செய்ய நினைத்த மக்கள் நடுவிலிருந்து நீங்கள் பத்திரமாய் இயேசுவைப்போலவே நடந்து சென்றிட முடியும். இன்றைக்கும் இது நடக்கிறது!

**தேவன் தம்முடைய ஜனத்தை, இயேசுவுக்கு செய்ததைப் போலவே செயலாற்றி காப்பாற்றுகிறார்! மிகவும் ஆச்சரியமான வழிகளை உருவாக்கி பாதுகாக்கிறார்!**

உங்களிடத்தில் விசுவாசம் மாத்திரம் இருக்குமென்றால், எண்ணற்ற வழிமுறைகளைக் கையாண்டு தேவன் உங்களைப் பாதுகாப்பார்! அதைக் குறித்து நாம் என்ன சொல்லக்கூடும்! உங்கள் ஜீவியம் ஒருவரும் அசைக்கக்கூடாத "**அசைவில்லாத ஜீவியமாய்**" நிலைத்து நிற்கும்!

இயேசு ஜெபித்த யோவான்.17 -ம் அதிகாரத்தை கவனித்துப் பாருங்கள். "பிதாவே இந்த சீஷர்கள் என்னிலும் நான் அவர்களிலும், பிதாவே நீர் என்னிலும் இருக்க வேண்டும்! அப்போது பூரணமான ஒருமைப்பாடு ஏற்படும்" என ஜெபித்தார். மேலும் அவர் ஜெபிக்கும் போது, அவர் ஜெபிப்பதைப்போன்ற தேறின ஒருமைப்பாடு ஏற்பட்டு விட்டால் இரண்டு காரியம் நடைபெறும் எனவும் கூறினார்: 1) நான் இரட்சகராய் உலகத்திற்கு வந்ததையும் 2) நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல் அவர்களிலும் அன்பாய் இருக்கிறீர் என்பதையும் உலக மக்கள் அறிந்து கொள்வார்கள். ஆனால் துரதிருஷ்டமாக, இன்று அநேக கிறிஸ்தவர்கள் தங்களை இரட்சிக்க இயேசு வந்தார் என்பதை மாத்திரமே விசுவாசிக்கிறார்கள். ஆகவே "இயேசு உலக இரட்சகர்" என்பதை மாத்திரமே பிரசங்கிக்கிறார்கள். ஆனால் இயேசுவின் ஜெபத்தில் காணப்பட்ட இரண்டாவது முக்கிய சத்தியத்தை எத்தனை பேர் பிரசங்கிக்கிறார்கள்? "இயேசுவை அன்புகூர்ந்ததைப்போலவே, என்னையும் அன்பு கூருகிறார்!" என்ற

*சத்தியத்தை அநேகர் பிரசங்கிக்கவில்லை, நானும்கூட இரட்சிக்கப் பட்டு 16 - வருஷங்களாய், வேதத்தை நன்றாய் படித்திருந்தாலும், இந்த சத்தியத்தைக் காண முடியாத குருடனாயிருந்தேன்.*

**பரிசுத்தராகிய இயேசுவை தேவன் நேசிக்க முடியும். ஆனால் அதே நேசத்தை 'பாவியாகிய' என்னை, தேவன் நேசிக்க மாட்டார் என்றே தவறாய் எண்ணினேன்.**

*ஒருவேளை, இயேசுவின் மீது நதியளவு தண்ணீரை தேவன் ஊற்றி, சில துளிகள் மாத்திரமே என் தலையிலும் விழும்படிச் செய்கிறார் என வேதத்தில் சொல்லப்பட்டிருந்தால், அதை என்னால் விசுவாசிக்க முடிகிறது! ஆனால், இயேசுவின்மீது பொழிந்த அதே நதி பிரவாகத்தை, என்மீதும் தேவன் பொழிகிறார் என்ற இந்த உண்மையை என்னால் நம்ப முடியவில்லை! அது ஏனென்றால், என்னுடைய கெட்ட சிந்தை வாழ்க்கையும், தோல்வியும் நிறைந்த என்னையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன். நீங்களும் இவ்வாறாகவே உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறபடியால், இயேசுவை தேவன் நேசித்ததுபோல என்னையும் நேசிக்கிறார் என்ற உண்மையை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.*

*நீங்கள், உங்களை மாத்திரமே பார்த்துக் கொண்டிருப்பது 'பொய்யானது' என்றே கூற வேண்டும்.* **உண்மையான தெய்வ அன்பு உங்களைச் சார்ந்த நிபந்தனைக்கு உட்பட்டதல்ல.** *எனவே "இயேசுவை நேசித்ததைப் போலவே நம்மையும் நேசிக்கிறார்" என்ற உண்மை ஓர் மாறாத சத்தியமாகும். இரட்சிக்கப்பட்டு 16 வருடங்களுக்குப் பிறகு இந்த சத்தியத்தை நான் விசுவாசித்த பிறகுதான், என் கிறிஸ்தவ ஜீவியம் அசைக்கப்படாத ஜீவியமாய் நிலை நின்றது! இந்த நிலையை நான் விசுவாசித்தபிறகு* **'பரிசுத்தாவியினால் நான் நிரப்பப்பட்டேன்!'**. *ரோமர்.5:5 கூறுகிறபடி "தேவனுடைய அன்பு என் இருதயத்தை நிரப்பிற்று" அந்த தேவனுடைய அன்பு என்ன? "பிதா இயேசுவை நேசிக்கிறதைப் போலவே என்னையும் நேசிக்கிறார்" என்ற தேவ அன்பு!*

*அன்றுமுதல் சுமார் 42 வருடங்களாய் இந்த சத்தியத்தை நான் நம்முடைய எல்லா கிறிஸ்தவ ஐக்கிய சபைகளிலும் பிரசங்கித்து வருகிறேன். வெளி நாடுகளில் உள்ள, நம்முடைய ஐக்கிய சபைகளிலும் பிரசங்கித்து வருகிறேன். நான் கண்ட உண்மை என்னவென்றால், நான் பிரசங்கித்த ஜனங்களில் 'வெகு கொஞ்சமானவர்களே' இந்த சத்தியத்தை விசுவாசிக்கிறார்கள்! அது ஏனென்றால், இந்த சத்தியத்தைக் கேட்ட அநேகர் 'இன்னமும் தங்களையே பார்த்து' கொண்டிருக்கிறார்கள்.*

முற்காலத்தில், நானும் இதே தவறை செய்தேன். பாவிகளிலும் பிரதான பாவி நான் என்று பவுல் கூறிவிட்டபடியால், அதை அடுத்த இரண்டாவது கொடிய பாவியாக என்னை நான் கண்டேன்! இங்கே நான் தாழ்மையாக இருப்பதற்கு முயற்சிப்பதாக நீங்கள் எண்ண வேண்டாம். மிகக்கேடான என் வாழ்க்கையை நான் பார்த்து கொண்டிருந்தபடியால், மெய்யாகவே பவுலின், பிரதான பாவிக்கு அடுத்த ஸ்தானத்தில் நான் இருப்பதாக உணர்ந்தேன்.

**ஆனால் தேவனோ, நான் எவ்வாறு இருக்கிறேன் என்பதை சார்ந்து இல்லாமல் அளவில்லாத அன்பை என் மீது வைத்திருந்தார். நித்திய ஜீவன் என்பது 'இவ்வாறாக' நாம் தேவனை அறிவதுதான்!**

ஆகவே இரட்சிக்கப்பட்டு 16 வருடங்களாகியும் நான் தேவனை அறியாத மனுஷனாய் இருந்தேன்! இதை வாசிக்கும் அன்பார்ந்தவர்களே, நீங்கள் உங்களையே பார்த்துக் கொண்டிருக்கும் வரை ஓர் அசைவில்லாத ஜீவியத்திற்குள் நீங்கள் ஒருக்காலும் வந்தடைய முடியாது. இந்த சத்தியங்களை நீங்கள் வாசித்து, இயேசுவை அன்புகூர்ந்தது போலவே தேவன் என்மீது அன்பாய் இருக்கிறார் என்ற பகுதியை, இந்த பத்திரிக்கையில் கலர் தீட்டி நீங்கள் வைத்துக்கொள்ளலாம். அவ்வாறு வைத்திருப்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. **ஆம், விசுவாசமும் பரிசுத்தாவி அபிஷேகமுமே காரியம்!**

ஒரு தவறும் செய்யாத இயேசுவை அன்புகூர்ந்த தேவன் "அதே அன்பை" பாவியாகிய என்மீதும் வைத்து அன்பு கூருகிறார் என்ற சத்தியத்தை உங்களால் **விசுவாசிக்க முடிகிறதா?** இதை விசுவாசித்தால், உங்கள் ஜீவியம் அசைக்கப்படாத ஜீவியமாய் மாறிவிடும். ஏனென்றால், அந்த அசைவில்லாத ஜீவியத்தை நான் பெற்றிருக்கிறேன். நீங்களும் பெறுவீர்கள்!

**இவ்வாறு தேவ அன்பு உங்கள் உள்ளத்தில் பரிசுத்தாவியினால் ஊற்றப்பட்டிருந்தால், நல்லவரல்லாத பிறரையும் நேசிக்கும் அன்பை நீங்கள் பெற்றுவிடுவீர்கள்.**

இரகசியம் என்னவென்றால் "இயேசுவை நேசித்ததுபோல பாவியாகிய என்னையும் தேவன் நேசிக்கிறார்" என்ற சத்தியத்தை உங்கள் இருதயத்தில் விசுவாசித்து பெற்றுவிட்டீர்கள்! என்பதுதான். இயேசுவை அன்பு கூர்ந்ததைப்போலவே தேவன் என்னையும் அன்புகூருகிறார் என்ற விசுவாசம் உங்களில் உறுதிபடும்போது "இயேசுவை 300 ஜனங்கள் தள்ளிவிட வந்தபோது, இயேசுவை

*தப்பிக்கச் செய்து பாதுகாத்த பிதாவானவர், என்னையும் தப்பிக்க வைத்து பாதுகாப்பார்!" என்ற வாழ்க்கையைப் பெறுவீர்கள்!!*

"**இவ்வாறு இயேசுவுக்கு போலவே எனக்கும்**" *என்ற உறுதியான பங்கை நீங்கள் கண்டடைந்து விட்டால், 1கொரிந்தியர்.15:58 கூறுகிறபடி "கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராது என்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாத வர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்போதும் பெருகுகிற வர்களாயும் இருப்பீர்களாக" என்ற ஆசீர்வாதம் உங்களில் நிலைத்திருக்கும் என்பது உறுதி!*

*– சகரியா பூணன்*

---

## மரண துயரத்தில் 'தெய்வ நேசத்தையே' தஞ்சம் கொண்டேன்!

***சு***கமடைந்த நான், பாரீஸில் உள்ள கன்னிமாடத்திற்கு திரும்பிச் சென்றேன். அங்கு நான் சந்தித்த கன்னிமாடத் தலைவி, என் மீது அலாதி அன்பு காட்டினார்கள். அவர்களோடு நான் பெற்றிருந்த ஐக்கியம், தேவனோடு நான் நெருங்கிச் சேர ஊக்குவிப்பதாயிருந்தது. **'தேவனோடு உறவு கொண்டவர்களிடம்'** நாம் வைத்திருக்கும் ஐக்கியம்......நம்மையும், தேவனோடு நெருங்கிச் செல்லத் தூண்டுவதை என்னால் காண முடிந்தது!

அங்கிருந்த நாட்களில், ஒரு நாள் நான் அதிகாலை 4-மணிக்கு திடீரென்று விழித்துக்கொண்டேன்! 'என் தந்தை இறந்து விட்டார்' என்ற உணர்வு என் மனதில் உறுதியாய் பட்டது. ஆகிலும், அந்த சமயத்தில் என் ஆத்துமாவோ பூரண இளைப்பாறுதலில் இருந்தது!

இருப்பினும், நான் நேசித்த என் தந்தை மரித்து விட்டார் என்ற உணர்வு, என்னை தேவனிடத்தில் ஓடிவரச் செய்து "ஓ என் தேவனே, வாழ்க்கைக்கு இனியவர்கள் பிரிந்து போனாலும், என் விருப்பமோ உம்மிடமே தஞ்சம் கொண்டுள்ளது. இந்த சூழ்நிலையிலும், என் விருப்பம் என்று ஏதும் இல்லை, உம் விருப்பமே ஆகட்டும்! **இரண்டு வித்தியாசமான கிண்ணரங்கள் 'ஒரே இசையை மீட்டுவதைப் போல்' உம்மிடம் ஐக்கியம் கொண்டுள்ளேன்!** இந்த சீரான ஐக்கியமே, என் உள்ளத்திற்குள் பூரண சமாதானத்தை தந்துள்ளது! உமக்குப் பிரியமானவைகள் எவைகளோ, அதுவே என்னில் ஆகட்டும்" என தேவனிடம் மனமாற ஜெபித்து அமைதியானேன்.

இவ்வாறு என் சுய சித்தம் அவரில் மறைந்திருப்பதை நான் உணர்ந்தாலும் "என் முழுமையையும் நான் அவரில் இழக்க, நான் இன்னமும் அதிக கிரயம் செலுத்த வேண்டும் என்ற உணர்வு என்னை

விழிப்புடன் இருக்கச் செய்தது! இன்று அனேகர் 'தங்கள் முழு சுயசித்தத்தையும்' தேவனுக்கே ஒப்புக்கொடுத்து விட்டதாக எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களின் மெய்யான நிலையோ, தேவனுடைய எல்லைக்கு இன்னமும் வெகு தூரமாய் நிற்கிறார்கள்.

இவ்வித நிலையில் தேங்கியவர்கள், பெரும் சீற்றமான உபத்திரவ நேரங்களில், தங்களின் சுயம் இன்னமும் உயிருடன் வாழ்வதைக் கண்டு கொள்கிறார்கள்! என் உள்ளம் தவித்ததெல்லாம்.... உச்சக்கட்ட துன்ப நேரத்தில், தனக்காக யாதொன்றும் விரும்பாத மாந்தர்கள் எங்கே? அவ்வேளையில், தங்கள் ஆஸ்தியையோ, தங்கள் கௌரவத்தையோ, தங்கள் சுயத்தையோ, தங்கள் வசதியையோ அல்லது தங்களுக்கு பிரியமான சுயாதீனத்தையோ தேடாத மாந்தர்கள் உண்டோ?

**சுயத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதாக எண்ணிக்கொண்ட இவர்கள், அவைகள் இன்னமும் தங்களுக்குள் வாழ்வதைக் கண்ட பிறகு.... உடனே அவைகளை துரிதமாய் களைந்தெறிய மனப்பூர்வ விருப்பம் கொண்டிருக்கிறார்களா?**

இவ்வாறு, தேவனுடைய முன்னோக்கி நடத்தும் அசைவிற்கு தங்களை எந்த மறுப்பும் கூறாமல் இசைந்து சென்றவர்கள், சொல்லி முடியாத **பூரண கிருபையை பெறுவார்கள்** என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை!

அன்று மதியம் நான் கன்னிமாட தலைவியோடு பேசிக்கொண்டிருந்தபோது "கனம் பொருந்திய தலைவியரே, என் தந்தை மரணம் அடைந்து விடுவார் என்ற ஆழமான உணர்வு இன்று எனக்கு ஏற்பட்டது. இந்த உணர்வை உங்களோடு எவ்வாறு பகிர்ந்து கொள்வது என தயங்கினேன்...." என நான் கூறிக்கொண்டிருக்கும் போதே, ஒரு செய்தியாளர் அவசரமாய் வந்து கன்னிமாட தலைவியை வெளியே உள்ள அறைக்கு அழைத்தார். அது, எனக்கு தேவன் முன்கூட்டியே உணர்த்திய செய்திதான்! ஆனால் கன்னிமாட தலைவியார் சற்று தயக்கத்துடன் "உன் தந்தை அதிக வியாதியில் உள்ளார் என, உன் கணவர் தகவல் அனுப்பியுள்ளார்" எனக் கூறியதை, நான் மாற்றி "இல்லை, என் தந்தை இறந்து விட்டார்" என உறுதிப்பட கூறி பாரீஸ் நகரத்திலிருந்து சென்றிட ஒரு வாடகை கோட்ச் சீக்கிரமாய் ஒழுங்கு செய்ய வேண்டினேன்.

கோட்ச் வண்டி கிளம்பிட இரவு 9 - ஆன போது, கன்னிமாட தலைவி என்னிடம் வந்து "மடத்தில் உனக்கு உதவியாய் அனுப்பிட இந்த இரவு நேரத்தில் ஒரு ஆளும் இல்லை. அப்படியிருக்க கோட்ச்

வண்டியில் இரவு பயணம் செய்வது ஆபத்தானது" என எச்சரித்தார்கள். நானோ "என் தந்தை வீட்டிற்கு நான் செல்ல வேண்டியது தவிர்க்க முடியாத நிலை" எனக் கூறி பயணம் மேற்கொண்டேன். அந்த வாடகை கோட்ச் வண்டிக்காரன், ஏற்கெனவே சில நபர்களை ஏற்றியிருந்தான். அவர்களோடு சேர்ந்து, உட்கார்வதற்கு கூட இடம் இல்லாமல் நெருக்கத்தில் அமர்ந்தேன். காட்டு நடுவில் பயணித்தப்போது திருடர்கள் பயத்திற்காக, கோட்ச் வண்டியை ஒதுக்கி, எல்லோரையும் கீழே இறங்கும்படிச் செய்தான். இதுபோன்ற கடின சூழ்நிலையில் பயணித்து பழகாத நான் நடுக்கமுற்றேன்! ஆகிலும் என்னைக் கரம் பிடித்து நடத்திய ஆண்டவரின் அரவணைப்பின் பாதுகாப்பிற்குள் என்னைப் பத்திரப்படுத்திக்கொண்டேன்.

ஆம், தன் ஆத்துமாவை கர்த்தருக்குள் அடக்கி வாழும் ஒரு நபருக்கு எந்த பயமும் அச்சமும் மேற்கொள்ள இயலாது! நடுநிசி தாண்டி, வீடு வந்தபோது, என் தந்தை இரவு பத்து மணிக்கே அடக்கம் செய்யப்பட்டார் என அறிந்தேன். வீட்டில் உள்ள அனைவரும் துக்க ஆடை அணிந்திருந்தனர். நீண்ட பயணமாய் வந்த நான் அதிக பெலவீனம் கொண்டபடியால், மயங்கிய நிலையில் என் படுக்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். சுமார் ஒரு மணி நேரம் கூட நான் படுக்கையில் இளைப்பாற முடியவில்லை. அதற்குள்ளாக ஓர் மிகப் பெரிய துக்க செய்தி என்னை அண்டியது. "ஐயோ, நான் என்ன செய்வேன். நம் மகள் இறந்துவிட்டாள்!" என அலறி என் கணவர் என் அறைக்குள் வந்தார்.

**நான் பிரியமுடன் நேசித்த ஒரே மகள் மரித்துவிட்டாள்! ஆண்டவர் மீது அளவில்லாத பாசம் கொண்ட மகள். என் வாழ்வின் சூழ்நிலையை புன்னகையுடன் புரிந்து கொண்டவள். பல சமயங்களில் வீட்டின் மூலையில் ஒரு விரிப்பை வைத்து நெடு முழங்காலில் ஜெபித்துக் கொண்டிருப்பாள்!**

நான் தனியாக ஜெபிப்பதை அவள் கண்டுவிட்டால், அவள் கரத்தை என் கரத்தோடு சேர்த்து வைத்து சேர்ந்து ஜெபிப்பாள். நான் நீண்ட நேரம் ஜெபிப்பதைக் கண்டு "அம்மா நீங்கள் ஆண்டவரோடு ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைப்போல் என்னால் ஜெபிக்க முடியவில்லையே?" என கண்ணீர் கசிவாள்!

சில நேரங்களில் நான் தனியே ஜெபித்துக்கொண்டிருப்பதைக் கண்டு என் கண்களை உற்றுநோக்கி, மூடி இருக்கும் என் கண்ணைப் பார்த்து, என் தோளை உலுக்கி "அம்மா என்ன, தூங்குகிறீர்களா?" என

*கேட்பாள். நான் விசாலமாய் கண் திறப்பதைக் கண்டு "ஓ, நீங்கள் நம் அன்புள்ள இயேசுவிடம் ஜெபித்துக்கொண்டிருக்கிறீர்கள்!" எனக் கூறி என்னோடு முழங்காலிட்டு ஜெபிப்பாள்.*

*அவள் வயது வந்து பெரியவளாய் மாறியபோது, "நீ ஒரு ராஜனை திருமணம் செய்ய வேண்டும்!" என என் மாமியார் அவளிடம் சிறுபிராயத்திலே சொல்லி வைப்பார்கள். அதற்கு என் மகளோ, "நான் திருமணம் செய்ய எனக்கு ஆண்டவர் இருக்கிறார்.... அப்படியிருக்க* **எனக்கு வேறு ஒரு ராஜ கணவர் தேவையில்லை!** *திருமணமும் செய்ய மாட்டேன்" என என்னைப்போல் வைராக்கியமாய் இருந்ததைக் கண்டு என் பிஞ்சு மகளை என் மாமியார் பல முறை பிரம்பு வைத்து அடித்திருக்கிறார்கள். அடிவாங்கிய அவளோ, அமைதியாய் நிற்பாள்!*

*கபடற்ற மனதோடு இளமையின் அழகைக் கொண்ட அவள் மற்ற பிள்ளைகளைப்போல் அல்லாமல், அடக்கமாய் உடை உடுத்தி ஒரு தேவ தூதனைப்போல் இருப்பாள்! என்ன வேலை சொன்னாலும், மறுக்காமல் செய்யும் அவளது பண்பு அவளுடைய தூதனைப்போன்ற அழகிற்கு இன்னும் அழகூட்டுவதாய் இருக்கும்! அவளை என் கணவர், என் மாமியாரோடு மாத்திரமே வைத்திருக்க விரும்பியிருந்தாலும், ஒரு முறை அவர் என்னைப் பார்த்து "நம் மகள் அழகாய் இருக்கிறாள் என்பதை விட அவளது நற்குண பண்பு என் உள்ளத்தை கவர்ந்து விட்டது" எனக்கூறி மகிழ்வார்.* **என் மனதிற்கு ஒத்த ஆறுதலை நான் அவளிடம் பலமுறை பெற்றிருக்கிறேன்.** *அவளுடைய சகோதரன் தன் பாட்டியின் வெறுப்போடு தன்னையும் கலந்ததற்கு எதிர்மறையாக, என்னிடம் எப்போதும் ஓடிவந்து கட்டிப்பிடித்துக் கொள்வாள். இன்றோ, இடைவிடாத இரத்தப்போக்கினால் மரித்துவிட்டாள்! நான் என்ன சொல்வேன்? அவளில் பிரியமாயிருந்த ஆண்டவருடைய கரங்களில், அவள் சாய்ந்து விட்டாள்!*

**என்னை விட்டு அவள் பறிக்கப்பட்டது போல் தோன்றினாலும், அவளை தன் மார்ப்போடு அணைத்துக் கொண்ட ஆண்டவரின் ஞானமுள்ள காரணங்களை நான் அவரிடம் கேட்கத் துணியவில்லை!**

*இவ்வாறு, **1672** - ஜூலை மாதத்தில் என் அன்பு தந்தையும், தேவனுடைய பிரியத்திற்கு நேசமான என் அருமை மகளும் கர்த்தருடைய சமூகத்தில் அடுத்தடுத்து, இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். நேசத்தின் சமாதியில் கண்ணீர் வடித்தேன்.... என் இருதயமோ என் ஆண்டவரை இறுகப்பிடித்துக்கொண்டது!*

*– மேடம் குயான்*

## 'மாவலிய வேதமே' என் ஊழிய இரகசியம்!

**பொது** மைதானங்களில் நடந்த விசேஷ கூட்டங்களில், விக்கிள்ஸ்வொர்த் மிகப்பெரிய திரை வாசகங்களை ஆங்காங்கு நிறுத்தி வைப்பார். அவ்வாறு எழுதப்பட்ட வாசகங்களில் மிகப் பிரதானமாய் இரண்டு வாசகங்கள் எப்போதும் இருக்கும்: 1) கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்தார்! 2) உன்னை சுகமாக்கும் கர்த்தர் நானே! கூட்டங்களுக்கு வரும் மக்கள், அந்த வாசகங்களால் வெகுவாய் கவரப்பட்டு, இதுவரை அவர்களுக்குள் இல்லாத 'விசுவாசம்' துளிர்த்ததைப்போல் உணர்வார்கள்!

விக்கிள்ஸ்வொர்த்தின் விசுவாசம், ஒளிவு மறைவின்றி வெகு எளியதாய் பளிச்சிடும்! அவ்வாறு தன் ஆண்டவர் மீது குழந்தையைப் போன்ற விசுவாசத்தில் அசைவில்லாத வேர்கொண்டு நிலைத்திருந்தார். தேவனுடைய வார்த்தை அனைத்தையும் தன் இருதயத்தில் அப்படியே ஏற்றுக் கொண்டு விசுவாசிப்பார். தான் விசுவாசித்த அந்த வசனங்களை முற்றிலும் நடைமுறைப்படுத்த தீவிரம் கொள்வார். பயணமோ, நண்பர்கள் விழாவோ, உறவினர் கூடுகையோ ஆகிய எந்த இடம் பாக்கி இல்லாமல், வேதாகமத்தை திறந்து மகிழ்வுடன் வாசித்துக்கொண்டிருப்பார். தன்னுடைய தனி ஜெப நேரத்திற்குப் பிறகு, மூன்று வேளை **உணவு நேரத்திற்கு முன்பாக, வேதத்தை வாசிக்காமல் அவர் சாப்பிடச் செல்வதில்லை!**

ஒருமுறை, அவர் எருசலேமிற்குச் சென்று, பிரதான மந்திரி மிஸ் ராட்போர்டு (Miss Radford) கட்டளைப்படி 'மிஷனெரி இல்லத்தில்' தங்க வைக்கப்பட்டார். மிஸ் ராட்போர்டு உறுதியான கட்டளை கொடுப்பதிலும், அதை நிறைவேற்றுவதிலும் உலகளாவிய மதிப்பை பெற்றவராயிருந்தார்.

அவருடைய மாளிகையில் ஒழுங்கின் கட்டுப்பாடு அதிக போற்றுதற்குரியதாய் இருக்கும். யாருடன் சேர்ந்து அவர் உணவு அருந்தினாலும், சரியான நேரத்தில் அது தொடங்கி குறிக்கப்பட்ட நேரத்தில் அது முடிவடைந்துவிடும்! அந்த ஒழுங்கை யாராலும் மீறப்பட்டதில்லை! ஆகிலும் மிஸ் ராட்போர்டு ஒரு சிறந்த தேவ மனிதனாகிய விக்கிள்ஸ்வொர்த்தை போன்ற நபரை தன் வாழ்வில் சந்தித்ததே இல்லை எனக் கூறலாம். விருந்து சாலையில் அவரோடு விருந்து அருந்த வந்த விக்கிள்ஸ்வொர்த், தனக்கு குறிக்கப்பட்ட ஆசனத்திற்கு முன்பாக வந்து நின்றதும் "விருந்து ஆரம்பிக்கட்டும்!"

என அதிகார தொனியில் *மிஸ் ராட்போர்டு* கூறினார். எல்லோரும் விருந்து சாலையின் ஆசனத்தில் அமர்ந்த வேளையில், விக்கிள்ஸ்வொர்த் நின்று கொண்டிருந்தார். உட்கார்ந்த அனைவரும் மிகுந்த பதட்டமுடன் விக்கிள்ஸ்வொர்த்தை பார்த்தார்கள். அவர் கெம்பீரமாய் "விருந்தை சற்று நேரம் நிறுத்தி வையுங்கள், **முதலாவது நம் பரலோகப் பிதா, நமக்கு என்ன பேசுகிறார் என்பதை கேளுங்கள்**" எனக் கூறி, தன் பையில் வைத்திருந்த புதிய ஏற்பாட்டை எடுத்து குறிப்பிட்ட வேத வாக்கியத்தை ஆணித்தரமான அபிஷேகத்தோடு வாசித்தார். பின்பு "இந்த ஆவிக்குரிய உணவை நாம் அனைவரும் நம்முடைய மனதில் ஏற்று, உட்கொண்டு.... அம்மையார் வழங்கும் விருந்தை இரண்டாவதாக புசிக்கக்கடவோம்" எனக் கூறி அமர்ந்தார்.

**அவருடைய செயல்பாட்டை கவனித்த *மிஸ் ராட்போர்டு*, அன்றிலிருந்து, எது முதன்மையான உணவு? என்ற பங்கை உணர்ந்தவராய், முற்றிலும் மாற்றமடைந்தார். அதற்கு பிறகு நடந்த உணவு நேரங்களில், கனம் பொருந்திய அம்மையாரின் விருந்து சாலையில் முதலாவதாக வேதம் வாசிக்கப்பட்டு, அதன்பிறகு உணவு பரிமாறப்பட்டது!**

விக்கிள்ஸ்வொர்த் தன் பிரசங்கங்களில் வேத வாக்கியத்தின் மேன்மையை வெகுவாய் போற்றி உயர்த்தி பேசுவார்: 1) வேத வாக்கியம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆதி நிலை கொண்டது. 2) காலத்தால் அழியாதது. 3) சொல்லி முடியா ஜெயசக்தி கொண்டது. 4) நித்திய இலக்கை கொண்டது 5) உருமாற்றும் வல்லமை கொண்டது 6) மாறாத அதிகாரம் கொண்டது 7) ஜீவியத்தின் எந்த பகுதிக்கும் போதுமானது 8) 'முழுமை நிறைவின்' பரவசம் கொண்டது.... என்றெல்லாம் வாயார மனதார போற்றுவார்!

தன் இனிய வேதத்தின் மகத்துவத்தை, அவர் செல்லும் இடமெல்லாம்: "மிகுந்த தியானமுடன் வாசியுங்கள்! உங்கள் குறிப்பிலும் மனதிலும் எழுதி வைத்து கொள்ளுங்கள்! அதை ஆதாரமாய் வைத்து ஜெபியுங்கள்! அதை தீவிரமாய் கைக் கொள்ளுங்கள்! மற்றவர்களுக்கு எக்காள தொனியுடன் அறிவியுங்கள்!" என கூறுவதோடு, இப்படியெல்லாம் தேவனுடைய வார்த்தை உங்கள் உள்ளத்தில் தங்கி இருந்தால், "**நீங்களே தேவனுடைய நிருபமாய் மாறும் வரை**" தேவனுடைய வார்த்தை உங்களில் தொடர்ந்து கிரியை செய்து கொண்டே இருக்கும்! என கெர்ஜித்து முழங்குவார்! இவ்வாறு தேவனுடைய வார்த்தையில் ஆழமான விசுவாசமும், அந்த விசுவாசத்திற்கு ஏற்ற செயலும், விக்கிள்ஸ்வொர்த் ஊழியத்திற்கு மாபெரும் இரகசியமாய் திகழ்ந்தது!

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

## துன்பத்தின் பாதையில் 'நிந்தையும்' உண்டு!

*சீர்பெற்று மிளிரும் பரிசுத்தவான்களின் 'இரகசியமே' அவர்கள் கடந்து செல்லும் துன்பத்தின் பாதைதான்! ஆகிலும், இந்த அபரிதமான ஆசீர்வதிக்கப்பட்ட பாதையில், 'நிந்தையும்' உள்ளது! ஆம், இந்த உத்தம பரிசுத்தவான்களை சூழ்ந்து நிற்கும் மக்களோ, அந்த துன்பங்களை சுட்டிக்காட்டி அவர்களை* **நிந்தித்து,** *தலைதுலுக்கி* **பரியாசம்** *செய்வார்கள்! என்பதுதான். இதுபோன்ற கதியில்தான் இயேசுவும் நடந்து வந்தார், நானும் கடந்து வந்தேன். அந்த அனுபவத்தில் நான் கர்த்தர் மூலம் திடன்கொண்டு, மற்றவர்களுக்கும் மகிழ்வுடன் கூறும் நற்செய்தியை பெற்றிருக்கிறேன்!*

**துன்பத்தின் இடுக்கமான பாதையில் செல்லும் உங்களை, ஆவிக்குரிய வாசனை இல்லாத லௌகீக கிறிஸ்தவர்கள் உங்களை நிந்தித்து தூற்றும்போது, சிறிதுகூட மனம் தளர்ந்து சோர்ந்து போகாதீர்கள்.**

*நாம் வாழும் இந்த உலகில் கூட ஒளியும், இருளும் இசைந்து வாழ இயலாது. தங்கள் ஆசைக்கும் விருப்பத்திற்கும் இணங்கி வாழும் கிறிஸ்தவர்கள் உங்களை எப்போதும் தவறாகவே புரிந்து கொள்வார்கள்! லோகத்து சிந்தை கொண்டவர்கள், ஆவிக்குரிய மனதுடையவர்களை பகைப்பார்கள், எதிர்த்தும் நிற்பார்கள்! அதுமாத்திரமல்லாமல், அவர்களின் சுய நலத்திற்காக எதையும் செய்ய துணியலாம் என முனைந்து நிற்பார்கள். அதுபோன்றவர்கள், எப்போதும் 'முரண்பாடுகளை' உங்கள் மீது வாரியிறைப்பார்கள்!*

*நிந்தையை ஏற்றுக்கொள்வதால் வரும் துன்பங்கள் நமக்கு அபாயம் அல்ல! நமக்கு அபாயமாயிருப்பதெல்லாம், மாய இன்பங்களைத் தேடும் இந்த உலகின் "புகழ்ச்சியும் வாழ்த்தும்" உங்களைத் தேடிவருவதும், அதை நீங்கள் ஏற்றுக்கொள்வதுமே மிகுந்த அபாயமாகும்! வாழ்த்துக்களை ஏற்றுக்கொண்டு, ஆவிக்குரிய நித்திய பாதையை 'சிலுவையென' தள்ளிவிடாதிருக்க எச்சரிக்கையாயிருங்கள்! துன்பங்கள் மூலமாகவும், நிந்தைகள் மூலமாகவும் இந்த லோக ஜனங்கள் உங்களை மேற்கொள்ள நீங்கள் அனுமதித்து விட்டால், ..... உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை அவர்கள் சின்னாபின்னமாக்கிப் போடுவார்கள் என்பதும் உறுதி என்பதை அறியுங்கள்.*

*ஒருமுறை, எனக்குத் தெரிந்த ஒரு பரிசுத்தவான் தன் விசுவாசத்தை உரத்த சத்தமாய் அறிக்கை செய்து, ஜனங்களைப் பார்த்து* **"உங்கள் சுய விருப்பங்களை சிலுவையில் அறைந்து வாழுங்கள்"** *என திரள்*

*கூட்டத்தாரிடத்தில் சவாலிட்டு பேசினார். அந்த கிறிஸ்தவ கூட்டத்தில் அவருடைய சவாலைக் கேட்ட 'மாம்ஷீக கிறிஸ்தவர்கள்' கடும் கோபமடைந்தார்கள். அன்று மாலை அவர் வெளியில் போய் கொண்டிருந்த போது, இந்த மாம்ஷீக கிறிஸ்தவ ஜனங்கள், எதிரிகள் போல் அவரை சூழ்ந்து கொண்டு, ஒரு மரத்தில் தலைகீழாய் கட்டி தொங்கவிட்டார்கள். எதிர்பாராத அந்த துன்ப நிலையிலும், தனக்கு ஏற்பட்ட துன்பத்தினாலும், அபகீர்த்தியினாலும் சிறிதுகூட பாதிக்கப்படாதவராய் "தன் இருதயத்தில் பூரண சமாதானம் கொண்டவராய்" பிரகாசத்துடன் இருந்தார்! தன்னை துன்புறுத்திய மனுஷீகமான கிறிஸ்தவர்களை அவர் நோக்கிப் பார்த்து "இந்த உலகத்தில் உள்ள அனைத்தும், ஒன்று பாக்கியில்லாமல், எல்லாமே தலைகீழாய்தான் இருக்கிறது! நீங்கள் என்னை 'தலைகீழாய் தொங்கவிட்டதாக' எண்ணலாம். உண்மையில், நீங்கள் என்னை நேராய் நிறுத்தி வைத்திருக்கிறீர்கள். அவ்வளவுதான்! ஒரு ஒளி பிம்பத்தின் புரொஜக்டரில் உள்ள லென்சு தலைகீழான பிம்பத்தை, திரையில் நேராய் காண்பிப்பது போலவே, உங்கள் பார்வையில் நான் தலைகீழாய் இருக்கலாம்! தேவனுடைய பார்வையிலோ, நான் நேராய் நிமிர்ந்து நிற்கிறேன்!" என வெற்றிக் குரலோடு பேசினார்.*

*உத்தமமான கிறிஸ்துவின் பாடுகளின் வழியாய் செல்லும் என் தோழர்களே, நான் கூறும் மகா உன்னத செய்தியை கேளுங்கள்:*

> ***நீங்கள் தேவனை முழு இருதயமாய் பின்பற்றி "ஒரு இரத்த சாட்சியாய் மரிப்பது மிக எளிது! ஆனால் உங்களை நீங்கள் அனுதினமும் தத்தம் செய்து "ஜீவ பலியாய்" மரிப்பதே, உன்னத சிகர வாழ்க்கை!" என்பதை அறிந்து கொள்ளுங்கள்.***

*சரீரமரணம் ஒருமுறைதான். ஆனால் தேவனை உத்தமமாய் பின்பற்றும் சீஷர்களோ "அனுதினமும் மரித்திட வேண்டும்!" தேவனுக்காகவும் பிறருக்காவும் பணிசெய்திட, "உயிருள்ள இரத்த சாட்சியாய்" தத்தம் செய்கிறவர்களையே தேவன் தேடுகிறார்! துன்ப பாதையில் நடந்திடும் உடன் பங்காளர்களே "தேவனைப் பற்றிய உங்கள் உத்தமத்தில் முழுவதுமாய் ஒப்புவித்து வாழும் நீங்கள்... தேவனுக்காக உங்கள் உயிரைக் கொடுத்தாலும்! அல்லது அவரது பணிக்கென அனுதினமும் மரித்தாலும்... நீங்கள் தேவனோடு ஒன்றற கலந்து, தேவனுடைய சம்பூர்ண இன்பத்தில் நிலைத்து வாழ்வீர்கள். அந்த சந்தோஷத்தின் ஒளியையே, உங்கள் உடன் தோழனாகிய நானும் என் உள்ளத்திலும் என் முகத்திலும் பிரகாசித்து வாழ்கிறேன்!" ஆம், கிறிஸ்துவின் வீரரே உங்களுக்கு நலம் உண்டாகட்டும்!* – சாது சுந்தர்சிங்

## ‘கருவில் என்னை தெரிந்து கொண்ட’ ஆண்டவர்!

*என் தகப்பனார் மதுரையைச் சேர்ந்தவர்! இந்து மதத்தில் அதிகப் பற்றுள்ளவர்! கழுத்தில் உருத்திராட்சம் அணிந்து, நெற்றியிலே விபூதி பூசி, ஒரு விக்கிரகத்தை வைத்துக்கொண்டு பூசை செய்து வந்தார்கள். என் தாயாரும் தகப்பனாரோடு சேர்ந்து சொரூபத்தை வணங்கி வந்தார்கள். நான் 1873 - ம் ஆண்டு பிறந்த அதே வருடத்தில், நெல்லை மாவட்ட ‘சங்கரன்கோயிலுக்கு’ குடிபுகுந்தோம்! எனக்கு சங்கர பாண்டியன் என பெயர் சூட்டினார்கள்! நானோ மார்க்க விஷயத்தில் என் பெற்றோருக்கு முற்றிலும் எதிரிடையாயிருந்தேன்.* **ஏன் அப்படியிருந்தேன் என்பது எனக்கே தெரியாது.** *என் நெற்றியில் ஒருபோதும் விபூதி பூசினவனல்ல. விக்கிரகத்தை ஒருபோதும் வணங்கினவனல்ல. இதற்காக என் தாயாரிடம் அடிப்பட்டிருக்கிறேன்.* **விபூதி பூசிச் சாமி கும்பிடு** *என்று என்னை அதட்டியிருக்கிறார்கள். எல்லாக் காரியங்களிலும் அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடந்த நான் இந்த விஷயத்தில் கீழ்ப்படியவில்லை.*

*கிறிஸ்தவர்களை நான் கண்டவனுமல்ல, வேறொருவரிடம் கற்றுக்கொண்டவனுமல்ல! நானும் என்னோடு படித்த சிறு பையன்களும் சேர்ந்து இந்துக் கோவில்களுக்குப் போவோம். கோபுரமுள்ள பெரிய கோவிலுக்குள் போய் மூலஸ்தானத்தைச் சுற்றி வருவோம். அவர்கள் கைகளை உயர்த்தி சுவாமி கும்பிடுவார்கள். நான் கும்பிடமாட்டேன்! அங்குள்ள மரங்களின் பழங்களைப் பிடுங்கித் தின்போம். பிரகாரத்தைச் சுற்றி வரும்போது பிராமணர்கள் சர்க்கரைப் பொங்கல், வடை, அதிரசம் செய்து கொண்டிருப்பதைக் காண்போம். இதற்காகவே கோவிலுக்குள் போவேனே தவிர, சாமி கும்பிட அல்ல!*

*நாங்கள் வேறு பல தோட்டங்களுக்கும் போவோம். அங்கேயும் சிறுசிறு கோவில்களும் சாமிகளும் உண்டு. என்னோடு வரும் பள்ளித்தோழர்களான நாகமுத்து, வெள்ளைக்கண்ணு, அண்ணாமலை என்பவர்கள் அந்தச் சாமிகளைத் தவறாது வணங்குவார்கள். நான் கும்பிடாதிருப்பதை நெடுகிலும் கவனித்த அவர்கள், ஒருநாள் என்னைக் கோவில்முன் நிறுத்தி, என்னைப் பார்த்து: சங்கரபாண்டியா, நீ ஒருபோதும் சாமி கும்பிடாதிருக்கிறாயே ஏன்? என்று கேட்டார்கள்.*

**உடனே நான் என் கையை வானத்திற்கு நேரே உயர்த்தி, இதுவா சுவாமி? மேலே அல்லவோ சுவாமி இருக்கிறார் என்று மேகத்தைக் காட்டினேன். இப்படிச் சொல்லும்படி ஒருவரும் எனக்குப் போதிக்கவில்லை. இந்த எண்ணம் எப்படி வந்ததென்று எனக்கும் தெரியாது!**

*சங்கரன் கோயிலில் திருவிழாக்கள் மகா சிறப்பாய் கொண்டாடப்படும். நாலா திசைகளிலுமிருந்து திரளான ஜனங்கள் சாமி தரிசனத்திற்காக வந்து கூடுவார்கள். நாதசுர வாசிப்பைக் கேட்கவும், வேடிக்கைகளைப் பார்க்கவும், சப்பரங்களையும் தேர்களையும் பார்த்து நான் தொடர்ந்து செல்லுவேன். விக்கிரகங்களை ஏறிட்டுப்பார்க்கவும் மாட்டேன், அவைகளைக் கும்பிடவுமாட்டேன். இதற்காகத் தாயாரிடம் அடிவாங்குவேன். எழுதப்படிக்க தாயாருக்குக் கற்றுக்கொடுக்கும் வாத்தியாரும் நான்தான்; சாமி கும்பிடாததற்காக தாயாரிடம் அடிவாங்கும் வாத்தியாரும் நான்தான்! நான் சாமி கும்பிடாமல் 'அவபக்தனாக' வளருகிறேனே என்பது அவர்கள் கவலை.*

*ஒருநாள் நான் தனிமையாய் ஊர் பெரிய கோவிலுக்குள் போயிருந்தேன். ஊர் மாடுகளை மேய்க்கிறவன் அங்கே வந்து என்னைக் கண்டான். நான் விபூதி பூசுவதில்லை! சாமி கும்பிடுவ தில்லை! என்பது அவனுக்குத் தெரியும். அவன் சாம்பலைக் கொண்டு வந்து* **இதை உன் நெற்றியிலே பூசு** *என்று அதட்டினான். நான் இணங்க வில்லை. அவன் கட்டாயமாகப் பூசினான். உடனே அதை அழித்து விட்டேன். பிறகு மூலஸ்தானத்திலிருந்த விக்கிரகத்தை எனக்குக் காட்டி, அதைக்* **கும்பிடுடா** *என்றான். நான் மறுத்தேன். என் கைகளைச் சேர்த்துப்பிடித்துக் கும்பிடும்படி உயர்த்தினான். நான் கைகளை உருவிப் பின்னாகவைத்துக் கொண்டேன். என் இடுப்பிலிருந்த சிறு வேஷ்டியை அவிழ்த்துப்போட்டான். நான் அதற்கும் மசியவில்லை!*

*சங்கரன்கோயில் முழுவதும் இந்துக்கள் நிறைந்த ஊர். கிறிஸ்தவர்களோ, கிறிஸ்தவ ஆலயமோ, ஆராதனைகளோ வேத போதனைகளோ அங்கே இல்லாத காலத்தில் என் பெற்றோர் சென்ற வழி நான் நடவாமலும், மற்ற இந்துக்களின் கொள்கைகளைப் பின்பற்றாமலும்,* **விக்கிரகங்களை வெறுத்து, வானத்துக்கு நேரே என் கைகளை உயர்த்தின காரணமென்ன?**

*நான் இந்துவா? இந்து அல்ல! நான் கிறிஸ்தவனா? கிறிஸ்தவனுமல்ல! கிறிஸ்துவைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஐந்து ஆறு வயதுச் சிறுவனாயிருக்கையில், இந்த மாறுதல் என்னிடத்தில் காணப்பட்டது ஆச்சரியமல்லவா? "நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்து,* **தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்**" *என்று பவுல் சொன்னது என் விஷயத்திலும் உண்மையாயிற்று (கலா.1:15).*

*– பரமானந்தம் ஐயர்*

## 'தூங்கிவழியும்' கிறிஸ்தவம் ஒழியட்டும்!

*அகிரிப்பா இராஜாவிற்கு முன்பாக சுவிசேஷத்தினிமித்தம் குற்றவாளியாக நின்ற பவுல், கிட்டத்தட்ட சிங்கக்கெபியின் மரண வாசலுக்கு வந்துவிட்ட நிலைதான்! ஆனால் பவுலோ சிறிதேனும் அச்சமில்லாமல் தலைநிமிர்ந்து நின்றார். 'நாக்கு வாயோடு ஒட்டிக்கொண்டது' என பயந்து பதறும் பிரசங்கியாய் பவுல் ஒருபோதும் நின்றதில்லை. சரீர தைரியத்தை விட மனசாட்சியின் தைரியமே பெரிது என பவுலுக்குத் தெரியும்!*

**அவ்வேளையில் பவுல் சாட்சி பகிர்ந்த தைரியம் "கிறிஸ்தவ தானியேல்" தைரியமாய் இருந்தது போல், அந்த ரோமானிய சிங்ககெபியின் வாசலில் நின்று பவுல் கர்ஜனை புரிந்தார்! மனிதர்கள் சூழ வந்து, ஒரு தீர்க்கதரிசியின் உடலை சிதைக்கலாம். ஆனால் அந்த தீர்க்கதரிசியை அழித்துவிட இயலாது!**

*நாம் வாழும் சூழ்நிலை காரிருள் மேகம் போலவே இருக்கிறது. இன்றைய அரசியல் கூட இப்படித்தான் இருக்கிறது. முன் நின்று நடத்திச் செல்லும் ஒளி நட்சத்திரம் ஒன்றுகூட இல்லை. கற்பு ஒழுக்கத்தின் வானத்தைப் பாருங்கள், அதுவும் இன்றைய நாட்களில் காரிருள் மேகத்தைப் போலவே இருண்டிருக்கிறது! கிறிஸ்தவ ஊழியங்களை ஏறிட்டுப் பாருங்கள்!*

**தொலைக்காட்சி பெட்டியின் முன் வரும் உங்கள் பிரசங்கிகளைப் பாருங்கள்.... இவர்கள் மெய்யாகவே சுவிசேஷ ஊழியம் செய்கிறார்களா? என்ற கேள்வியும் கேட்டுப் பாருங்கள்.**

*இவர்களின் ஊழியப்பணியில் உண்மையாகவே மனம் மாறியவர்கள் எத்தனை பேர்? 'கிறிஸ்துவைப் புறக்கணித்து விட்டு' நரகாக்கினைக்கு வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவத்தை உற்றுப் பாருங்கள்! காலம் கடந்த பிறகும்* **'எழுப்புதலின் சுடர்'** *இன்னமும் அந்த காரிருள் மேகத்தில் தோன்றவில்லை. சீயோனில், ஆர்த்தெழும் மாந்தர்களுக்குப் பஞ்சம்! கிறிஸ்தவ அனல்கொண்ட ஊழியம் இன்று தூங்கிவழிகிறது! சபையில் அசைவில்லாது நிற்க வேண்டிய சத்தியத்தின்தூண் சரிந்து, தூங்கும் கிறிஸ்தவனுக்கு தலையணையாய் மாறிவிட்டது. அனல் கொண்ட கிறிஸ்தவன் எங்கே? இந்த கேள்விக்குப் பதிலை உங்களைச் சுற்றிலும் பார்க்காதீர்கள்.... நீங்களே அனல் கொண்ட கிறிஸ்தவனாய் மாறுங்கள்! அதுவே, உங்கள் இரட்சக தளபதிக்கு நீங்கள் காட்டும் மரியாதை!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*



## இயேசுவின் சீஷன் பிலிப்பு,

### கல்லெறிந்து மரித்த சுவிசேஷ தீரன்!

(AD 51)

ஆண்டவரே, பிதாவை எங்களுக்கு காண்பியும், அது எங்களுக்குப் போதும்! என பக்தியின் கெம்பீரம் கொண்டவர் இந்த சீஷன் பிலிப்பு! (யோவான்.14:8). அதற்கு இயேசு "பிலிப்புவே.... என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" எனக்கூறிய வேத வாக்கை மனதார விசுவாசித்தவனே இந்த பிலிப்பு. கிறிஸ்து மரித்து உயிர்த்த பிறகு, இயேசுவின் சீஷர்களுக்கு எங்கு பார்த்தாலும் துன்பங்களும் வியாகுலங்களும் பெருகியது. இந்த உபத்திரவங்கள் யாதொன்றும், இயேசுவின் சீஷர்களை பின்னடையச் செய்யவோ அல்லது அவருடைய சுவிசேஷம் அறிவிக்கும் கட்டளையை நிறுத்திக் கொள்ளவோ செய்திட முடியவில்லை!

கிறிஸ்துவுக்குப் பின் 34 - ம் ஆண்டில் ஸ்தேவான் இரத்த சாட்சியாய் மரித்தார். அக்காலத்தில், இயேசுவின் சீஷனாகிய பிலிப்பு சமாரியாவுக்குச் சென்று அடையாள அற்புதங்களோடு "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு" மாபெரும் எழுப்புதலை உண்டாக்கினார். பின்பு, ஆவியானவர் உள்ளம் பற்றியபடி பல்வேறு நாடுகளுக்கு சீஷர்கள் சென்றபோது பிலிப்புவோ துருக்கி தேசத்திற்கும், சீரியா தேசத்திற்கும் நடத்தப்பட்டு அயராது சுவிசேஷ பணியாற்றினார். அந்த இரண்டு தேசங்களிலும், பல இடங்களில் சபைகளை ஸ்தாபித்தார்.

கடைசியில் *பிரிஜியா* என்ற நகரிலுள்ள *ஹியாராபோலிஸ்* என்ற ஸ்தலத்திற்கு வந்தார். அங்கு சுவிசேஷத்தை பிரசங்கித்து, பல அற்புதங்களை பிலிப்பு மூலம் தேவன் செய்தார். இருப்பினும், பிலிப்புவின் வல்லமையான சுவிசேஷ பிரசங்கங்களை, அந்த நாட்டு விக்கிரக ஆராதனைக்காரர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். எதிர்ப்பை பொருட்படுத்தாமல் விசுவாச தைரியத்துடன் தொடர்ந்து சுவிசேஷ பணியாற்றிய பிலிப்புவை, ஒரு தூணில் கட்டி, ஜனங்கள் சூழ நின்று அவரை கல்லெறிந்து கொன்றார்கள்! கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பிறகு 51 – வது வருடத்தில் பிலிப்பு, கிறிஸ்துவுக்கு சுகந்த வாசனையாய் தன் ஜீவனை ஈந்தார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## கிறிஸ்து நாமத்திற்கு அபகீர்த்தியா? வாலிபனே, மனந்திரும்பு!

சமீபத்தில் கோவையில் மிகவும் பிரபல்யமான ஐந்து ஜேப்படித் திருடர்களைப் போலீசார் கைதுபண்ணி அவர்களின் புகைப்படங்களையும் பத்திரிக்கையில் வெளியிட்டிருந்தனர். பத்திரிக்கையில் ஐந்துபேரின் படத்தையும் மேலெழுந்த வாரியாக நான் பார்த்தபோது, அவர்களில் ஒருவரின் பெயர் 'தேவனுடைய நண்பன்' என பெயர் பெற்ற விசுவாச தந்தை ஆபிரகாம்! மற்றொரு பெயர், போத்திபாரின் அரண்மனையில் தனக்கு நேரிட்ட பாலிய சோதனையை ஜெயித்து, அவரது உத்தம ஜீவியத்தினிமித்தம் சிறையிலிருந்து, எகிப்தின் அதிபதியாக உயர்ந்த யோசேப்பு!

இந்த கிறிஸ்தவ பெயர்களை குற்றப்பட்டியலில் காணும் ஒரு புற மதஸ்தன், இயேசு இரட்சகருக்குத் தன் இருதயத்தை மனமுவந்து திறந்து அவரைத் தன் அன்பின் நேசராக ஏற்றுக்கொள்ள முன்வருவானோ? கர்த்தருடைய ஜெபத்தின் முதல்வரியே "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்பதேயாகும். 'நாமம்' என்பது பெயரும், அந்த பெயருக்கேற்ற அர்த்தமும் கொண்ட ஓர் குணாதிசயமேயாகும்! "இயேசு" என்ற நாமம் ஓர் பெயர்! அந்தப் பெயரின் அர்த்தமும், குணாதிசயமும் "நம் பாவங்களை நீக்கி இரட்சிப்பார்" என்பதுமேயாகும்!

அவன் ஒரு கிறிஸ்தவன்! அவள் ஒரு கிறிஸ்தவள்! என நீங்கள் கிறிஸ்தவ பெயரிட்டு அழைக்கப்படும்போது, நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தை தாங்கியிருக்கிறோம் என்ற பொறுப்பை பெறுகிறீர்களல்லவா? 'அவருடைய நாமம்' தரித்த ஒரு கிறிஸ்தவன் துன்மார்க்க பாவம் செய்யும் போது, அவன் தூஷிக்கப்படுகிறான் என்பதை விட, அவன் பெயரில் அடையாளமாய் உள்ள "கிறிஸ்து" தூஷிக்கப்படுகிறாரே! ஓ கிறிஸ்தவ வாலிபனே, உன் இரட்சகருக்கு அபகீர்த்தி உண்டாக்கும் இக்காலத்தில், நீயும் உன் அன்புள்ள இரட்சக பெருமானுக்கு அபகீர்த்தி உண்டாக்கலாமா?..... உன் மீறுதலுக்கு தேவனுடைய இரக்கத்தை வேண்டி, துக்கித்து மனந்திரும்புவாயாக! கிறிஸ்துவின் வழியில், ஓர் புதிய சகாப்தம் உன் மூலம் தோன்றுவதாக! கிறிஸ்துவின் நாமத்திற்கு பரிசுத்த நறுமணம் உன் மூலம் பரிமளிப்பதாக! ஆமென்

- *சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.